# STR-3-TA

## வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகம் ஒவ்வொரு படியாக - நிகழ்ச்சி 3

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு கிறிஸ்தவர்களில் நான்கில் ஒருவர் அவர்களுடைய வாழ்நாளில்தானே இயேசு மீண்டும் வந்திடுவார் என்பதை விசுவாசிக்கின்றனர். எதிர்காலத்தை குறித்து கரிசனையுடைய நம் அனைவருக்கும் தேவன் கூறிடும் செய்திதான் வெளிப்படுத்தின புத்தகம். அதில் சபைகளுக்கு இயேசு கிறிஸ்து இறுதியாக சொல்லிடும் வார்த்தைகள் மற்றும் முக்கிய நிகழ்வுகளான எடுத்துக்கொள்ளப்படுதல், இரண்டாம் வருகை, இறுதி நியாயத்தீர்ப்பு, சாத்தானுக்கு என்ன சம்பவிக்கும் என்பதையும், அந்திகிறிஸ்து, தவறான மார்க்கத்தை பின்பற்றுகிரவர்களின் நிலைகளை கூறுகிறது. உபத்திரவகாலத்தில் நடக்க இருக்கும் கொடூரமான காரியங்களை கூறி எதிர்காலத்தை குறித்து இயேசு எச்சரிக்கிறார், அர்மகேதொன் யுத்தம், இந்த பூமியில் அவருடைய இரண்டாம் வருகை போன்றவை. இந்த புத்தகத்தில் ஆயிரவருட அரசாட்சி, இந்த பூமியில் வாழ்ந்த ஒவ்வொருவருக்குமான இறுதி நியாயதீர்ப்பு, தம்முடைய ஜனங்களுக்காக நித்தியத்தில் என்ன திட்டங்களை தேவன் வைத்திருக்கிறார் என்பதை பற்றி சொல்லப்பட்டிருக்கிறது.

இன்றைக்கு, உங்களை படிப்படியாக இந்த வெளிப்படுத்தல் புத்தகத்தை தெளிவாக புரிந்துகொள்ளும் விதத்தில் நடத்திசெல்ல இருக்கிறோம், தேவன் முன்னரிவித்திருக்கும் எதிர்கால நிகழ்வுகள் சம்பவங்கள் எல்லாம் சமீதிருப்பதை நீங்கள் புரிந்துகொள்ள உதவிடுவோம். இந்த விசேஷித்த ஜான் அன்கேர்பர்க் நிகழ்ச்சிக்கு உங்களை அன்புடன் வரவேற்கிறோம்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** நாம் வெளிப்படுத்தின விசேஷத்தை குறித்து பார்த்துக்கொண்டிருக்கிறோம் அதோடு வெளிப்படுத்தல் புத்தகத்தில் உங்களுக்கு இருக்கும் கேள்விகளுக்கும் பதிலளித்துக்கொண்டிருக்கிறோம். எனது விருந்தினர் டாக்டர். ஜிம்மி டியோங். அவர் தீர்க்கதரிசன பண்டிதர், அவர் 1993 முதல் மித்திய கிழக்கில் தான் வசித்து வருகிறார், அந்த நாட்களிலிருந்து ஒவ்வொரு இஸ்ரேலிய பிரதமர்களையும் அறிந்திருக்கிறார். நமது உலகில் நடக்கும் நிகழ்வுகள் அனைத்தையும் அவர் அறிந்து இருக்கிறார். அந்த நிகழ்வுகளை வெளிப்படுத்தல் புத்தகத்துடன் இணைத்து பார்க்கிறார்.

எனினும் இவையனைத்தும் வெளிப்படுத்தின விசேஷத்தை குறித்த அடிப்படை காரியங்களை கண்டறியும் செயல்களாகும். சரி, ஜிம்மி, கடந்த சில வாரங்களின் செய்தியை கேட்காதவர்களுக்காக, சுருக்கமாக சொல்லுங்க. எடுத்துக்கொல்லுதலை பற்றி பேசிடலாம், இரண்டாம் வருகையை குறித்து பார்த்திடலாம், இறுதி நியாயதீர்ப்பை குறித்தும் பார்த்திடலாம், இதில் எப்போது உபத்திரவ காலம் வருகிறது, எப்போது அந்திகிறிஸ்து தோன்றுவான் என்பதையும் பார்க்கலாம். மறுபடியுமாக எங்களுக்கு சொல்லுங்க.

**Dr. ஜிம்மி டியோங்**: வெல், நீங்க மூன்று முக்கிய நிகழ்வுகளை பற்றி கூறினீர்கள் – எடுத்துக்கொள்ளப்படுதல், கிறிஸ்துவின் வருகை, மற்றும் உபத்ஹ்டிரவகாலம், பெரிய வெள்ளை சிங்காசன நியாயதீர்ப்பு. வெளிப்படுத்தல் புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கும் 3 முக்கிய நிகழ்வுகளை விவரிக்கும் படியாக இந்த 3 தூண்களை வைத்திருக்கிறோம். எடுத்துக்கொள்ளப்படுதல், நான்காம் அதிகாரம் முதல் வசனம், மேலும் நான்காம் அதிகாரம் 2 லிருந்து 19:10 வரை, 16 அதிகாரங்கள், இதில் ஏழு வருட உபத்திரவ காலத்தை பற்றி விளக்கமாக சொல்லப்பட்டிருகிறது. சரி, இந்த தூண் கிறிஸ்து மீண்டும் பூமிக்கு வருவதை குறிப்பதாக இருக்கிறது. அதை வெளிப்படுத்தல் 19ம் அதிகாரம், 11ம் வசனத்திலிருந்து பார்க்கிறோம். அதற்க்கு பிறகு 20ம் அதிகாரத்தில் 1000 வருட அரசாட்சியை பற்றி பார்க்கிறோம். அது ஆயிரவருட அரசாட்சியை எடுத்துக்கூறுகிறது. அந்த ஆயிர வருட அரசாட்சியின் நாட்களில் இயேசுகிறிஸ்து ராஜரீகம் பன்னுகிரவராக அரசாளுவார், அப்போது பூமியில் எங்கும் சமாதானம் இருக்கும். இந்த கடைசி தூண், 3 தூண்களில் மூன்றாவது தூண், வெளிப்படுத்தல் புத்தகத்தின் 3 முக்கிய நிகழ்வுகளில் மூன்றாவது நிகழ்வை குறிப்பிடுகிறது, பெரிய வெள்ளை சிங்காசன நியாயதீர்ப்பு, வெளிப்படுத்தல் 20:11-15. அதற்க்கு பிறகு, நித்தியா வாழ்வு, புதிய வானங்கள், புதிய பூமி மற்றும் புதிய எருசலேம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், இதுதான் பார்த்துக்கொண்டிருக்கிறோம், அதோடு நாம் முதலாம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கும் இயேசுவின் தன்மைகளை பார்த்தோம், சபைகளுக்கு எழுதப்பட்ட கடிதங்களையும் பார்த்தோம். அதோடு, வெளிப்படுத்தல் புத்தகத்தில் சபைகளுக்கு எழுதப்பட்ட கடிதங்களுக்கு பிறகு, எல்லாம் பரலோகத்திற்கு மாற்றப்படும் நிலையை பார்க்க முடிகிறது. எடுத்துக்கொள்ளப்படுதல், ஜனங்கள் பரலோகத்திற்கு செல்வதை பார்க்கிறோம். அப்போது பூமியில் சம்பவிக்கும் காரியங்களும் இருக்கிறது, அதுதான் ஏழு வருட உபத்திரவ காலம். அது வெளிப்படுத்தல் புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஏழு முத்திரைகளுடன் துவங்குகிறது. இப்போது அந்திகிறிஸ்துவை பற்றி பார்த்ததை நினைவுபடுத்திடலாம், அந்திகிறிஸ்துவின் உதயம் தான் முதல் முத்திரை.

**Dr. ஜிம்மி டியோங்**: ஜான், முதலிலுள்ள முத்திரைகளின் நியாயதீர்ப்பான, 7 முத்திரைகளின் நியாயதீர்ப்பு, மூன்றுவிதமான ஏழு அடுக்குகளில் முதலாவதாகும், அது முதல் மூன்றரை ஆண்டு காலத்தில் நடக்கவிருப்பவை, எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு பிறகு துவங்கிடும் காரியம். அதாவது, அந்த ஏழு வருட காலத்தில் கடிகாரம் சுற்றத்துவங்குகிறது, தானியேல் 9:27ல் சொல்லப்பட்டிருப்பது போல, அந்திகிறிஸ்து வரும்போது, ஒரே அரசாங்கம் என்னும் நிலை, ஒரே பொருளாதாரம், ஒரே அரசியல்

தலைவர், இஸ்ரேலோடும் அதின் சத்துருக்களோடும் சமாதான உடன்படிக்கையை உருதிபடுத்திடுவான். சரி, அவன்தான் வெளிப்படுத்தல் 6:1-2ல் சொல்லப்பட்ட வெள்ளை குதிரையின் மேல் எரிவருகிறவன். அந்திகிறிஸ்து, இப்போதும் அவன், பூமியில் இருக்கிறான் என்று நான் நம்புகிறேன். நம்முடைய உலகில் இப்போது நடைமுறையில் உள்ள காரியங்கள் அனைத்தும், குறிப்பாக ஐரோப்பிய ஐக்கிய நாடுகளில் நடப்பவை, புதிய ரோம சாம்ராஜ்யத்தின் உள்கட்டமைப்பை கொண்டதாக காணப்படுகிறது, அதுதான் அந்திகிறிஸ்துவின் சாயலை உடையதாக கருதப்படுகிறது. இவைதான் உபத்திரவ காலத்தின் முதல் மூன்றையை ஆண்டுகள் இந்த உலகத்தை தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திட அடித்தளமாக இருக்கப்போகிறது. தயாராகிவிட்டது, தன்னை வெளிப்படுத்த அந்திகிறிஸ்து ஆயத்தமாகிவிட்டான்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஓகே, முதல் முத்திரையிலிருந்து துவங்கினீர்கள், அதில் அந்திகிறிஸ்து வெளிப்படுவான் என்றிருக்கிறது. வெள்ளை குதிரையின் மேல் ஏறி வருகிறவன் ஏன் அந்திகிரிச்துவாக இருக்கிறான்?

**Dr. ஜிம்மி டியோங்**: ஏனென்றால் அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு ஒரு கிரீடம் கொடுக்கப்பட்டிருந்தது, கையில் வில் கொடுக்கப்பட்டிருந்தது ஆனால் அதில் அம்பு இல்லை. இது நமக்கு தானியேல் 9:27ல் சொல்லப்பட்டிருப்பதை வெளிப்படுத்துகிறது அவன் சமாதான உடன்படிக்கையை உறுதிபடுத்துகிறான். அதை ஒப்பிடவில்லை, சமாதான உடன்படிக்கையை உறுதிபடுத்துகிறான். அந்திகிறிஸ்து அவன் ஸ்தானத்தில் நின்றிடுவான். முதல் மூன்றரை ஆண்டுகால பின்னணியை பற்றி, நாம் கடந்த நிகழ்ச்சிகளில் பார்த்தோம், ரோம் நகரை தலைமையாக கொண்டிருக்கும் கள்ளத்திருச்சபை. வெளிப்படுத்தின விசேஷம் 17ம் அதிகாரத்தை பார்க்கும்போது, மிருகம் என்ற வார்த்தையை பார்ப்பீர்கள். இப்ப, வெளிப்படுத்தலில் அதுதான் அந்திகிறிஸ்துவின் பெயர். மிருகம் என்று, 17ம் அதிகாரத்தில் எட்டு முறை சொல்லப்பட்டிருக்கிறது, இந்த கள்ள மார்க்கத்தை அவன் பொறுப்பேற்றிடுவான். இந்த கள்ள மார்க்கத்தை அவன் நிலைபடுத்தியவுடன் உலகம் முழுவதும் அவனை வணங்கிட ஆரம்பித்திடுவார்கள். இதுதான் முத்திரைகளின் நியாயதீர்ப்புகளால் வெளிப்படுத்தப்பட்ட காரியங்களாக இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், இது தீர்க்கதரிசன நூலாகும் இது உண்மை நிகழ்வுகளை நமக்கு கூறுகிறது. நம்மிடம் பேசும்படிக்கு தேவன் எதற்காக தீர்க்கதரிசன பாஷையை உபயோகிக்கிறார், அதை எப்படி புரிந்துகொள்வது?

**Dr. ஜிம்மி டியோங்**: அவர் தீக்கதரிசன மொழியை உபயோகித்திருப்பதை நம்புகிறேன், மற்ற புத்தகங்களையும் கொடுத்திருக்கிறார் தானியேல், எசேக்கியேல், சகரியா, மற்று வெளிப்படுத்தல் ஏனென்றால் அவர் என்ன சொல்கிறார் என்பதை நம்மால் கிரகித்து கொள்ள இயலாமல் இருந்திருக்கும் என்பதுதான் உண்மை. அவர் அடையாளங்களை பயன்படுத்துகிறார், அது கற்பனை கதையல்ல, அது உருவக்கதையோ அல்ல, ஆனால் சத்தியத்தை எடுத்துரைக்கும் அடையாளங்களாக இருக்கிறது. உங்களுக்கு ஒரு

விஷயத்தை நினைவுபடுத்துகிறேன் முதல் அதிகாரத்தில் இயேசு ஏழு நட்சத்திரங்களை கையில் எந்திக்கொண்டு ஏழு பொன் குத்துவிளக்குகளின் மத்தியில் உலாவிக்கொண்டிருந்ததை பார்த்தோம். இந்த தீர்க்கதரிசன புத்தகங்களை புரிந்துகொள்ள தொடர்ந்து தேவனுடைய வார்த்தையை வாசிக்கவேண்டும். அப்படி செய்யும்போது 1ம் அதிகாரம் 20ம் வசனத்தில், ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபைகளின் ஏழு தூதர்கள் என்றும் ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த திருமையின் கோட்பாடு அடையாளமாக சொல்லப்பட்டிருக்கும் வெளிப்படுத்தல் புத்தகத்தின் அனைத்து வசனங்களுக்கும் பொருந்தும், நியாயதீர்ப்புகளை விவரிக்கும் படியான தீர்க்கதரிசன வார்த்தைகள்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** எனக்கு பிடித்த விஷயம் எல்லா வசனங்களும் இணைக்கப்பட்டதாக இருப்பதுதான். அதை வாசித்தால் போதும். நீங்க எசேக்கியல் புத்தகம், தானியேல் புத்தகம், சகரியாவின் புத்தகம், மற்றும் வெளிப்படுத்தல் இவையனைத்தையும் ஒன்றிணைத்து பார்க்க முடியும். அதாவது, அப்போது வேதம் சொல்லுகிற இந்த காரியத்தை பற்றிதான் பேசிக்கொண்டிருக்கிறோம் என்ற தெளிவான விளக்கத்தை நாம் பெற்றுக்கொள்வோம்.

**Dr. ஜிம்மி டியோங்**: நீங்க இப்ப சொன்ன நான்கு புத்தகங்களும் மிக முக்கியமான புத்தகங்கள் ஜான். எதிர்காலத்தை குறித்த தேவ திட்டத்தை நீங்கள் புரிந்துகொள்ளும்போது அது கையுறைகளை போல சரியாக பொருந்தியிருக்கும். 2 பேதுரு 1:20 கூறுகிறது எந்த தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான போருளையுடையதாயில்லை. இது எல்லாரும் நினைவில் கொள்ளவேண்டிய முக்கியமான திருமறை கோட்பாடு. தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்டிருக்கும் ஒரு வசனத்தை மற்றொரு வசனத்தை வைத்து நிராகரிக்க நினைப்பது தவறு. அவையனைத்தும் கையுறைகள் போல நிச்சயம் சரியாக பொருந்தியிருக்கும்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஆல்ரைட். இயேசு அந்த முத்திரைகளை உடைக்கிறார், அப்படி செய்யும்போது, பூமியின் மீது நியாயதீர்ப்பு உண்டாகிறது. முதலாவதாக அந்திகிறிஸ்துவின் உதயம். இரண்டாவது சிவப்பு குதிரையின் மேல் ஏறிவருகிறவன். இதனுடைய அர்த்தம் என்ன?

**Dr. ஜிம்மி டியோங்**: சிவப்பு குதிரையின் மேல் ஏறியிருப்பவன் புறப்பட்டு போய் பூமிஎங்கிலும் யுத்தங்களை துவக்குகிறான். இயேசு கிறிஸ்து சொன்னது நினைவிருக்கிறதா யுத்தங்களின் செய்திகளை கேட்பீர்கள், உலகிலுள்ள அனைவருக்கும் ஆங்காங்கே நடக்கும் யுத்தங்களின் செய்திகள் அறிவிக்கப்படும். சமீபத்தில் கொலம்பஸ்ஸில் இருந்தேன், GA, பிரசங்கித்தேன். அது ராணுவமிருக்கும் பட்டணம். அந்த சமயத்தில் உலகின் பல்வேறு இடங்களில் மொத்தம் 57 யுத்தங்கள் நடந்துகொண்டிருப்பதாக சொல்லப்பட்டது. கார்லிசில் யுத்த கல்லூரியில் பட்டம் பெற்று வந்திருந்த படைத்தலைவர், PA, என்னிடம் வந்து கூறினார், “Dr. டியோங், ஒரு திருத்தம் செய்ய நினைக்கிறேன் என்றார்.” அதற்கு நான், என்ன தவறு செய்தேன்?” என்றதற்கு, 57 யுத்தங்கள் என்று சொன்னீர்கள் அல்லவா. நான் இப்போதுதான் போர் கல்லூரியை முடித்தேன், அங்கு உலகில் 153 யுத்தங்கள் நடப்பதாக கூறினார்கள் என்றார்.” அதுதான் நடக்கிறது. இந்த தேசங்கள் எல்லாம், ஜான், யூதர்களின் தேசமான இஸ்ரேலுக்கு

விரோதமாக திரண்டு கொண்டிருக்கிறது. அதுதான் இந்த இரண்டாம் முத்திரை, சிவப்பு குதிரையின் மேல் ஏறியிருப்பவன், உலகில் யுத்தத்தை நடப்பிக்கும் படியாக கையில் பட்டயத்தை ஏந்திக்கொண்டு வருகிறவன். இந்த தேசங்கள் எல்லாம் இஸ்ரேலுக்கு விரோதமாக யுத்தம் நடத்திட இப்போதும் தயார் நிலையில் உள்ளனர்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். எசேக்கியல் 38ம் அதிகாரத்தை பார்த்தோம், அந்த பட்டியலை குறித்து கூறினீர்கள். மறுபடியும் அதை சொல்ல முடியுமா, ஏன்னா எசேக்கியல் 38 இப்போது நடந்து வருகிறது என்று கூறினீர்கள். அநேகர் அத அறிந்திட விரும்புகிறார்கள், வெளிப்படுத்தல் புத்தகத்தில் எந்த இடத்தில் எசேக்கியல் 38 நுழைகிறது.

**Dr. ஜிம்மி டியோங்**: எசேக்கியல் 38 ஏழு வருட உபத்திரவ காலத்தின் துவக்கத்தில் நுழைகிறது. அதை பற்றி உங்களுக்கு விளக்கமாக சொல்லுகிறேன். அதற்க்கு முன்பு மற்ற புத்தகங்களில் இந்த ஒன்று திரண்டு வரும் தேசங்களை குறித்து சொல்லப்பட்டிருப்பதை கூற விரும்புகிறேன். தானியேலின் 11ம் அதிகாரம் 40 முதல் 45 வரை, வடதிசை ராஜா என்றிருக்கிறது – அது சீரியா என்றறிவோம் – தென்திசை ராஜா எனபது எகிப்தை குறிக்கிறது. சரி, இந்த இரு தேசங்கள் தான் முதலில் இஸ்ரேலுக்கு விரோதமாக படையெடுத்து வந்திடும் தேசங்கள். அதே வசனத்தில் பார்க்கும்போது வடதிசையிலிருந்து வரும், தென்திசையிலிருந்து வரும், கிழக்கிலும் மார்க்கிலும் இருந்து செய்திகள் வரும் என்றிருக்கிறது. அது நம்மை எசேக்கியல் 38ற்கு நடத்துகிறது, எசேக்கியல் 38 வசனம் 2ல் சொல்லப்பட்டிருக்கிறது, மாகோகு தேசத்தானான கோகு. கோகு தான் தலைவன், மாகோகு ஒரு இடம். நிலப்பரப்பை குறித்து விரிவாக பார்ப்பதற்கு போதிய நேரம் நமக்கு இல்லை. அதனால் சுருக்கமாக சொல்லுகிறேன் மாகோகு என்பது அந்த காலத்தில் இந்த புத்தகத்தை எழுதிய எசேக்கியல் வாழ்ந்த நாட்களில் உண்டாயிருந்த தேசம், அது காஸ்பியன் கடலுக்கும் கருங்கடலுக்கும் வடக்கே உள்ளது. அது இன்றைய ரஷ்யாவாக இருக்கிறது. மேலும் 2ம் வசனத்தில் மேசேக்கு தூபால் குறிப்பிடபட்டிருக்கிறது. வசனம் 6ல் கொமேர் மற்றும் தோகர்மா. சரி, இவையனைத்தும் வேதாகமத்தின் நான்கு கால்பாகமாக இருக்கிறது அதை இன்றைய நவீன துருக்கியாக பார்க்கிறோம். எசேக்கியல் 38ம் அதிகாரத்தின் 5ம் வசனத்தில் பெர்சியா குறிப்பிடப்பட்டுள்ளது. 1936 வரைக்கும் பெர்சியாவாக கருதப்பட்டது இன்றைக்கு நாம் அறிந்திருக்கும் ஈரான், ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான். எத்தியோபியா என்றிருக்கிறது, உங்க வேதத்தில் கூஷ் என்றிருக்கலாம், அது எத்தியோபியா, சோமாலியா, சூடான். புட் என்றிருக்கிறது,அல்லது லிபியா. அது இன்றைய லிபியாதான். நீங்கள் சங்கீதம் 83றை பார்க்கும்போது அதில் சவூதி அரேபியாவும் லெபனானும் சேர்க்கப்பட்டிருக்கிறது. நான் இப்போது சொன்ன அனைத்து தேசங்களும் தங்களை ஒன்று திரட்டிடும், அதை அவர்கள் முதல் ஆறு மாதத்தில் நடப்பித்திடுவார்கள், என நம்புகிறேன், உபத்திரவ காலத்தின் துவக்கம். எசேக்கியல் 38:8 கூறுகிறது இஸ்ரேல் தேசம் சமாதானமாக இருக்கையில் அப்படி செய்திடுவார்கள். தங்கள் ஆயுதங்களை ஓய்ந்திருக்கப்பண்ணுகையில் இப்படி செய்வார்கள். அவர்கள் பதிலற்ற கிராமங்களில் வாழ்வார்கள். ராணுவத்தில் இதற்கு அர்த்தம் என்னவென்றால் அவர்கள் ஆயுதங்களின்றி இருப்பார்கள் என்பதாகும். அவர்கள் தேசத்தில் பாதுகாப்பாக இருப்பார்கள். அது

எப்போது சம்பவிக்கும்? அந்திகிறிஸ்து சமாதான உடன்படிக்கையை உருதிசெயும்போது, பொய்யான சமாதானம், குறுகிய கால சமாதானம். ஆனால் யூதர்கள் தங்கள் மேசியா வந்துவிட்டதாக நினைப்பார்கள், சமாதானம் உண்டாயிற்று. அதினால் ஆயுதங்களை களைந்திடுவார்கள். அப்போது ஒன்று திரண்ட தேசங்கள் தாக்கிட துவங்கும். இது உபத்திரவகாலத்தின் முதல் ஆறு மாதத்தில் நடந்திடும்.
எசேக்கியல் 39ம் அதிகாரம் 2ம் வசனம் கூறுகிறது அந்த தேசங்கள் எல்லாம் முறியடிக்கப்படும். இதை குறித்து யோசித்து பாருங்கள், நான் சொன்ன அனைத்து தேசங்களிலும் காணப்படும் பொதுவான விஷயம், ரஷ்யா மட்டும் விலக்கப்பட்டிருக்கும், அவையனைத்தும் இஸ்லாமிய நாடுகள். அப்படியென்றால் இஸ்லாமியர்கள் தான், உபத்திரவ காலத்தின் முதல் ஆறு மாதங்கள், செயல்படும் ஜனங்களாக இருந்திடுவார்கள். அதுதான் திறவுகோல். நினைவிருக்கட்டும், அந்திகிறிஸ்துவுக்கு மற்றொரு பொறுப்பும் இருக்கிறது. அவன் ரோமில் இருப்பான், இத்தாலி, உலகின் ஒரே கள்ள சபையை நிறுவிட நினைப்பான். இஸ்லாமியர்கள் அந்திகிறிஸ்து நிறுவிடும் கள்ள சபையின் காலத்தோடு இணைந்து செயல்பட மாட்டார்கள். முதல் மூன்றரை ஆண்டுகள் இந்த கள்ளத்திருச்சபையின் செயல்பாடுகள் அரங்கேரும்படியாக அவர்கள் உலகத்தின் கண்களுக்கு மறைந்திருப்பார்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். தானியேல் 11ல், சொல்லப்பட்டிருக்கும் தேசங்கள், எசேக்கியல் 38டோடு, இணைந்து பெருத்த பாதிப்பை உண்டாக்கும். அவர்கள் இஸ்ரேலுக்கு விரோதமாக வருவார்கள், தேவன் இஸ்ரேலை பாதுகாப்பார். ஆனால் மூன்றாவது முத்திரையை பார்க்கும்போது இந்த சேனைகளினால் உண்டாகும் யுத்தங்களின் தாக்கத்தை பற்றி பார்க்க முடியும், ஏனென்றால் மூன்றாவது முத்திரை உலகில் பஞ்சத்தை உண்டாக்குகிறது. உலகளாவிய யுத்தங்களால் உணவு உற்பத்தி பாதிக்கிறது, உலகமெங்கிலும் பசிகொடுமை தலையெடுக்கும்.

**Dr. ஜிம்மி டியோங்**: அதாவது, WHO, உலக சுகாதார அமைப்பு, கூறுகிறது பூமியின் ஜனத்தொகையில் ஒன்றில் பாதிபேர் இன்றைக்கு இரவு உணவை வயிறார சாப்பிடாமல் படுக்கைக்கு செல்கிறார்களாம். அதுமட்டுமல்ல ஒவ்வொரு ஏழு நொடிகளுக்கு, ஒவ்வொரு ஏழு நொடிகளுக்கு, பசியினால் ஒரு குழந்தை இறக்கிறது. இந்த உலகில் நாம் எந்த நிலையில் இருக்கிரோம் என்பதை கவனிக்க வேண்டும். அமெரிக்கர்கள், செழிப்போடிருக்கும் அமெரிக்கர்கள், பசியினால் மாண்டுபோகும் ஜனத்தின் நிலையை புரிந்துகொள்வதே இல்லை. இதுதான் இப்போது நடந்துகொண்டிருக்கிறது. அடுத்ததாக நான்காவது முத்திரை, அதுதான் மரணம். பூமியின் ஜனத்தொகையில் நான்கில் ஒரு பங்கு – நம்முடைய தற்போதைய ஜனத்தொகை 6 பில்லியன் ஜனத்தில், 1.5 பில்லியன் மக்கள் – யுத்தங்களினால் மரித்திடுவார்கள், பஞ்சத்தில் மரித்திடுவார்கள், பலவித சம்பவங்களால் மரித்திடுவார்கள். அதற்க்கு பிறகு விசுவாசிகளில் பலரும் இரத்த சாட்சியாக மரித்திடுவார்கள். சரி, சபை, கிறிஸ்தவர்கள், எடுத்துக்கொள்ளப்படுவார்கள். ஆனால் அந்த காலத்தில் நாம் ஏற்கனவே பார்த்த இரண்டு இரத்த சாட்சிகள் பிரசன்கித்திடுவார்கள். பூமியில் இருக்கும் ஜனங்களில் பலரும், யூதர்களும் புறஜாதியினரும், கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வார்கள். அவர்களில் பலரும் மிருகத்தின்

முத்திரையை ஏற்காததால் இரத்த சாட்சியாக மரிப்பார்கள். அதற்கு பின்பு வானங்களில், பூமியின் நிலங்களில் சுற்றுச்சூழலில் நியாயதீர்ப்பு துவங்கிடும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், இப்போது ஒரு இடைவேளை எடுத்துக்கொள்வோம் இதை தொடர்ந்து பிறகு பார்ஹ்த்திடுவோம், ஏனென்றால் இப்போது உபத்திரவத்தின் மத்திய பகுதிக்கு செல்கிறோம். இந்த அந்திகிறிஸ்துவை பற்றி பார்க்க விரும்புகிறோம், உலகின் இந்த தலைவர் ஒருசில காரணங்களுக்காக இஸ்ரேலுக்கு போகிறார், அவர் தேவாலயத்திற்குள் பிரவேசித்து நம்பமுடியாத சில காரியங்களை பிரகடணிக்கிறார். நாம் திரும்ப வந்ததும் அதை பற்றி பார்க்க இருக்கிறோம். எனவே இணைந்திருங்கள்.

****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வருக. நேயர்களே, தேவன் நமக்கு வெளிப்படுத்தின விசேஷத்தை கொடுத்திருக்கிறார். சரித்திரத்தின் எந்த பகுதியில் நாம் இருக்கிறோம் என்பதை புரிந்துகொள்ளும்படியாக கிறிஸ்தவர்களுக்கு தேவன் இதை கொடுத்திருக்கிறார். இப்போது நாம் தொடர்ந்து பார்க்க இருப்பது, சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகு, தேவன் இந்த பூமியில் செய்ய இருக்கும் காரியங்கள் என்ன. இந்த முத்திரைகளின் நியாயதீர்ப்பை பற்றி பார்க்கிறோம். அதை நிறைவு செய்திடலாம், அதற்கு பிறகு அந்திகிறிஸ்து எருசலேமின் தேவாலயத்திற்குள் பிரவேசிப்பதை குறித்து பார்க்க வேண்டும். மேலும் நாம் சுற்றுசூழலில் உண்டாக இருக்கும் நியாயதீர்ப்பைபற்றியும் தேவன் நமக்காக வைத்திருக்கும் சில சுவாரஸ்யமான விஷயங்களையும் பார்க்க இருக்கிறோம். நேயர்களில் சிலர், ஜிம்மி, கேள்விகளை முன்வைக்கிறார்கள், இந்த காரியங்களில் எதற்காக இஸ்ரேல் இணைக்கப்படுகிறது? இஸ்ரேலை குறித்து அப்படியென்ன விசேஷம்? உலா நாடுகள் அனைத்தும் இறுதியாக எதற்காக இஸ்ரேலுக்கு விரோதமாக வந்து அதை தாக்க வேண்டும்?

**Dr. ஜிம்மி டியோங்**: அதாவது, தேவன் யூதர்களோடு உடன்படிக்கை செய்திருக்கிறார், அதாவது நான்கு வாக்குத்தத்தம் கொடுத்திருக்கிறார், ஆபிரகாமின் உடன்படிக்கை, தேசத்தின் உடன்படிக்கை, தாவீதின் உடன்படிக்கை, மற்றும் புதிய உடன்படிக்கை. யூத ஜனங்களின் வாழ்வில் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டம் இன்னும் இருக்கிறது. அவர் உண்மையுள்ளவர் என்பதை நிருபிக்கும் படி, யூத ஜனங்களுக்கு சில வாக்குத்தத்தங்களை கூறினார், அவை நிறைவேற்றப்பட வேண்டும். உதாரணமாக, வாக்குத்தத்த தேசம். வாக்குத்தத்த தேசத்தின் உடன்படிக்கையானது யுதஜனங்களுக்கு இப்போது இருக்கும் நிலபரப்பைவிட பத்து மடங்கு அதிகமாக இருக்குமென்பதை உறுதி செய்கிறது, அதில் எகிப்தின் பாதி பாகமும், இஸ்ரால் முழுவது, லீபனோன் முழுவதும், சீரியா முழுவதும், யோர்தான் முழுவதும், ஈராக்கின் முக்கால் பாகமும், குவைத் முழுவதும், சவூதி அரேபியாவின் முக்கால் பாகமும் அடங்கும்.

இதை, யோசித்து பார்க்கும்போது தேவன், யூத ஜனங்களுக்கு கொடுத்த வாக்குகள் தெளிவாகிறது, காரியம் இப்படியாக இருக்க, நாம் பார்த்த இந்த தேசங்கள் அனைத்தும் ஒன்று திரண்டு வருவதன் காரணம் புரிகிறது, யூத ஜனங்களுக்கு விரோதமாக

வருகிறார்கள், இவர்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனம். இந்த நிலத்தை மாத்திரம் அவர்களுக்கு வாக்களிக்கவில்லை, ராஜ்யத்தையும் அவர் வாக்களித்திருக்கிறார். அந்த ராஜ்யமானது, நிச்சயம், இயேசு கிறிஸ்து பூமிக்கு வரும்போது நிலைபடுத்தப்படும். அதற்காகத்தான் இந்த நியாயதீர்ப்புகள் அனைத்தும் நடந்தேறுகிறது. இந்த உலகின் வல்லமைகள் எல்லாம் தகர்க்கப்பட வேண்டும். யூத ஜனங்களுக்கு வாக்களித்த வாக்குத்தத்தத்தை இயேசுவும் பிதாவாகிய தேவனும் நிறைவேற்றுமுன் அவை முற்றிலும் தர்கப்பட வேண்டும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், மனிதர்களுக்கு இடைய சில காரியங்கள் நடந்தாலும், ஒரு ஆவிக்குரிய யுத்தமும் நடந்துகொண்டே இருக்கிறது, வெளிப்படுத்தல் புத்தகத்தை முன்னும் பின்னுமாக பார்த்துக்கொண்டிருக்கிறோம். நடந்துகொண்டிருக்கும் ஆவிக்குரிய யுத்தத்தை பற்றி சொல்லுங்கள் அவை பூமியில் சம்பவிப்பவைகளோடு எப்படி தொடர்புடையதாக இருக்கிறது.

**Dr. ஜிம்மி டியோங்**: நினைவிருக்கட்டும், உபத்திரவ காலத்தின் முதல் மூன்றரை ஆண்டுகள் கள்ளத்திருச்சபையின் பின்னணியில் செயல்படுமென்று கூறினேன், வேசி, வேதாகமம் அப்படித்தான் கூறுகிறது, வெளிப்படுத்தல் புத்தகத்திலும் இப்படிதான் சொல்லப்பட்டிருக்கிறது, 17ம் அதிகாரம். 17ம் அதிகாரம் 5ம் வசனம் பாபிலோனை குறிக்கிறது, வேசிகளுக்கும் அருவருப்புகளுக்கும் தாய். இங்கு, வேசி என்னும் வார்த்தை, தீர்க்கதரிசன வார்த்தையாக இருக்கிறது, நினைவிருக்கட்டும், கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்களுக்கு, அவர் மணவாளனாக இருக்கிறார். நாம் இயேசு கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கிறோம். கன்னித்தன்மையோடு இருப்பதற்கு எதிர்பதம் என்ன, திருமணத்திற்க்காக ஆயத்தமாக இருக்கும் கன்னிகைக்கு எதிர்பதம் என்ன? வெல், அதைதான் வேசி என்கிறோம், விபச்சாரி, கன்னிகளைந்தவள், கன்னி தன்மை இழந்தவள். இது தான் 17ம் அதிகாரத்தின் கள்ளத்திருச்சபையை குறிக்கிறது. அந்திகிறிஸ்து அதிகாரத்திற்கு வருகிறான், புதுப்பிக்கப்பட்ட ரோம சாம்ராஜ்யம் இந்த பாத்திரத்தில் செயல்படும். அதை 17அதிகாரத்தின் 3ம் வசனத்தில் பார்க்கிறோம் வெளிப்பாட்டை பெரும் யோவான் பார்க்கும் மிருகத்திற்கு பத்து கொம்புகளும், 7 தலைகளும் இருக்கிறது. பத்து கொம்புகள் புதுபிக்கப்பட்ட ரோம சாம்ராஜ்யம். அதை 17ம் அதிகாரத்தின் 12ம் வசனம் எடுத்துரைக்கிறது. வசனம் 9 கூறுகிறது ஏழு தலைகளும், அந்த ஸ்திரீ அமர்ந்திருக்கும் ஏழு மலைகளாம். யோவான் இந்த புத்தகத்தை கி பி 95 ல் எழுதினார், அவர் ரோம் பட்டணத்தை பற்றி கூறுகிறார். எனவே இறுதி காலத்தில், எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு பிறகு, முதல் மூன்றரை ஆண்டு கால சமயத்தில், கள்ளத்திருச்ச்சபை ரோம் பட்டணத்தில் தனது தலைமையகத்தை கொண்டிருக்கும். அந்த மூன்றரை ஆண்டு காலத்தின் இறுதியில், அதாவது, புதுப்பிக்கப்பட்ட ரோம ராஜ்ஜியம் உதயமாகும், அது வசனம் 16, அவை கள்ளத்திருச்சபையை முற்றிலும் அழித்துப்போடும். 17ம் அதிகாரத்தின் 17 வசனம் அருமையான கோட்பாடை உள்ளடக்கியுள்ளது. தேவன் தம்முடைய வார்த்தைகள் நிறைவேறுமளவும் மிருகத்திற்கு அதிகாரம் கொடுக்கும்படி அவர்கள் இருதயத்தை ஏவினார். அதுவே கள்ளத்திருச்சபையின் அழிவாகும்.

அதற்க்கு பிறகு அந்திகிர்ச்து ரோமிலிருந்து இடம்பெயர்ந்து, அவன் தனது தலைமையகத்தை, எருசலேம் பட்டணத்தில் நிறுவுவான். அப்போது எருசலேம் பட்டணத்தில் உள்ள, திரும்ப காட்டப்படும் தேவாலயத்திற்குள் அவன் பிரவேசிப்பான். அது எருசலேமின் தேவாலய பர்வதத்திற்கு மேலாக ச்தாபிக்கப்பட்டிருக்கும். வேதாகம் தானியால் 9ம் அதிகாரம் ம் வசனத்தில் கூறுகிறது, பாழாக்குகிறவன் வந்து இறங்குவான். இயேசுவும் அதை உறுதிபடுத்துகிறார், மத்தேயு 24:15, அதில் அவர் கூறுகிறார், “தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கும் பாழாக்கும் ஆருவருப்பை நீங்கள் காணும்போது ஓடிப்போங்கள்.” 2 தெசலோனிக்கேயர் 2: 4கூறுகிறது அந்திகிறிஸ்து தேவனுடைய ஆலயத்தில் நுழைந்து மகா மரிசுத்த ஸ்தலத்தில் தேவனைப்போல உட்காருவான். அதைதான் ஏசாய 14 கூறுகிறது, லூசிபர் சாத்தானான போது, அவன், “எருசலேமில் நான் ஆராதிக்கப்படுவேன் என்றான்.” இதுதான் சம்பவிக்கும். எனவே இந்த வசனங்கள் அனைத்தும், வெளிப்படுத்தல் 11:1 றும், உபத்திரவகாலத்தின் மத்தியில் இந்த தேவாலயம் எங்கு இருக்கும் என்பதை எடுத்துக்கூறுகிறது, எல்லாம் அப்படியே ஆகும், எருசலேமிலுள்ள தேவாலயத்தை இடிப்பதற்கான அனைத்து வேலைகளும் துவங்கிவிட்டன, தேவ பர்வதத்தில் இருப்பது, அதைதான் அந்திகிறிஸ்து தீட்டுப்படுத்திடுவான். அந்த சமயத்தில் தான் அந்திகிறிஸ்து கள்ளத்தீர்க்கதரிசியை மகா பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கும்படிக்கு அனுமதியளித்திடுவான். இந்த சொருபத்தை பேசவும் அசையவும் செய்திடுவான். இதை பற்றி வெளிப்படுத்தல் 13ம் அதிகாரம், 12ம் வசனத்திலிருந்து தொடர்ந்து பார்க்கலாம். அற்ப்புதங்கள், அதாவது, அடையாளங்கள், அற்ப்புதங்கள் ஆச்சரியமானவைகள், இவை கள்ளத்திருச்ச்சபை அந்திகிறிஸ்துவை ஆராதிக்க திறவுகோலாக இருக்கும். அந்த சமயத்தில், வெளிப்படாத இவற்றை இயேசுகிறிஸ்து பார்த்துக்கொண்டிருகிறார். இப்போது அந்திகிறிஸ்து மற்றொரு இடத்திற்கு மாறுகிறான், எருசலேம் பட்டணத்தை விட்டு அகன்று ஒரே உலகம், பொருளாதாரம், அரசியல், நிறுவனத்தை ஏற்படுத்திடுவான்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஓகே, அப்படின்னா அவன் ரோமிலிருந்து எருசலேமிற்கு போகிறான். இந்த காரியங்களின் மீதமுள்ளவற்றை பார்க்கலாம்.

**Dr. ஜிம்மி டியோங்**: அவன் இன்றைக்கு நாம் பார்க்கும் ஈராக்கிற்கு செல்கிறான். அந்த பட்டணத்திற்கு செல்கிறான், இதை வெளிப்படுத்தல் 18ம் அதிகாரத்தில் பார்க்கிறோம், பாபிலோன் என்றிருக்கிறது. 18ம் அதிகாரத்தில் பாபிலோன் என்ற வார்த்தை 3 முறை வருகிறது. நகரம் என்ற வார்த்தை 6 முறை வருகிறது. மகா என்ற வார்த்தை எட்டு முறை வருகிறது. 18ம் அதிகாரம் மகா நகரமாகிய பாபிலோனை பற்றி கூறுகிறது. இதுதான் அகிளுலகின் தலைமையகமாக இருக்கப்போகிறது ஒரே உலக பொருளாதாரம், அரசியல், அரசாங்க நிறுவனம், அந்திகிறிஸ்துவால் உருவானது, அங்கிருந்து மின்பாதி மூன்றரை ஆண்டுகளின் செயல்பாடுகள் நடக்கும், இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு முன்புவரை நடக்கும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். முத்திரை நியாயதீர்ப்புகள், அவை பெரிய பூமியதிர்ச்சியுடன் முடிவடைகிறது. ஆனால் அதில் பல லட்சக்கணக்கான மக்கள்

மாண்டுபோவார்கள், முத்திரை நியாயதீர்ப்புகளின் குறுகிய நாட்களில் பூமியிலுள்ள பலர் மரித்திடுவார்கள்.

**Dr. ஜிம்மி டியோங்**: அந்து முதல் மூன்றரை அன்ன்டுகளில், பூமியின் நான்கில் ஒரு பங்கு பாக்கள் கூட்டம் கொல்லப்படும். அந்த நான்கில் ஒரு பங்கு எனபது, இன்றைய நமது கணக்குப்படி, 1.5 பில்லியன் மக்கள். கடைசி மூன்றரை ஆண்டு காலத்தில், ஒரு எக்காள நியாயத்தீர்ப்பில், மற்ற மூன்றுல் ஒரு பங்கு கொல்லப்படுவார்கள். அதில் இன்னும் 1.5 மில்லியன் மக்கள் சேர்க்கப்படுவார்கள். இந்த பூமியில் நடக்க இருக்கும் கொடூரமான நியாயதீர்ப்பின் காலத்தில் பூமியின் ஜனத்தொகையில் பாதிக்கு பாதி மக்கள் கொல்லப்படுவார்கள்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஆல்ரைட், நாம் உபத்ஹ்டிரவ காலத்தின் மத்திய பகுதியில் இருக்கிறோம், உபத்திரவ காலத்ஹ்டின் இந்த நிலைக்கு அடுத்ததாக, இந்த பூமியின் சுற்றுச்சூழலில் உண்டாகும் நியாயத்தீர்ப்பை கொண்டுவரும் எக்காள நியாயதீர்ப்புகள் இருக்கிறது. அவை நிச்சயம் நம்பமுடியாதவைகளாக இருக்கிறது. எனவே, நேயர்களே, நீங்கள் காணத்தவறாதீர்கள்.மேலும் நாம் வெளிப்படுத்தின விசேஷம் வெளிப்படையாக கூறிடும் அந்நியர்களின் படையெடுப்பு இந்த பூமிக்குள் வருவதைக் குறித்தும் நாம் பார்க்க இருக்கிறோம். நீங்களும் கலந்து கொள்வீர்கள் என நம்புகிறேன். நீங்கள் என்றன்றைக்கும் நினைவில் கொள்ளும் நிகழ்ச்சியாக இருந்திடும்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கொர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.